# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கல்யாணக்குமார் | Caste: | |
| Father's Name: | பூமிநாதன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.10.2023

(Except A2 Others present. Petition u/s. 317 Crpc allowed for A2. )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தேவிப்பட்டிணம் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். அ.சா.1 வைரவகேசுவைத் தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. நீதிமன்றத்தில் வராத 2வது எதிரி சரவணன் தந்தை பெயர் முனீஸ்வரனையும் தெரியாது. கடந்த 21.03.2020ம் தேதி நானும் அரவிந்தனும் இரவு 9.00 மணிக்கு தேவிப்பட்டிணத்தில் இருந்து சக்கரவாளநல்லூருக்கு அரவிந்தனின் TN 65 AK 6018 என்ற பதிவு எண் கொண்ட கருப்பு ஊதா கலந்த பல்சர் பைக்கில் போனோம். அதை நான் ஓட்ட அரவிந்தன் என் பின்னால் உட்கார்ந்திருந்தார். போகும்போது சக்கரவாளநல்லூர் ஆர்ச் வளைவில் திரும்பும்போது ரோட்டில் இருந்த கல்லில் skid ஆகி ரோட்டின் வலதுபுறமாக விழுந்தோம். எனக்கு வலது மூட்டு, வலது தோள்பட்டை,

இடுப்பு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. அரவிந்தனுக்கு தலையின் பின்புறம் காயம் ஏற்பட்டது. மயக்க நிலையில் அரவிந்தன் இருந்தார். அங்கு ஒரு போலிஸ் வந்தார். அந்த பக்கமாக வந்த காரில் என்னையும் அரவிந்தனையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் அரசாங்கமிடமிருந்து தீருதவியாக கடந்த 15.02.2021ம் தேதி 25000 ரூபாயும், 25.03.2021ம் தேதி 50000 ரூபாயும் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கில் அந்த தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. போலிஸ் விசாரணையில் கடந்த 21.03.2020ம் தேதி இரவு 10.30 மணியளவில் அரவிந்தனுக்கு சொந்தமான பல்சர் பைக்கில் இராமநாதபுரம் சென்றுவிட்டு வேலுமாணிக்கம் பெட்ரோல் பல்க் அருகில் பெட்ரோல் போட வரும்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் பதிவு செய்யப்படாத Hyundai Creta காரில் வந்து நின்றார்கள் . அப்போது அரவிந்தன் என்னிடம் ஆஜர் எதிரிகள் நம்மல பார்த்து முறைக்கிறாங்க என்று சொன்னார் என்றும் பெட்ரோல் போட்டுவிட்டு செல்லும்போது அந்த வெள்ளை நிற காரில் பின்தொடர்ந்து விரட்டி வருவதுபோல வரவும் அரவிந்தன் முன் விரோதம் காரணமாக பாலா ஓட்டி வந்த காரை வைத்து நம்மை ஏற்றி கொள்ள வருகிறார் வேகமாக ஓட்டு என்று சொன்னார் என்றும், சக்கரவாளநல்லூர் விலக்கு ரோட்டில் இரவு 10.30 மணிக்கு போகும்போது இந்த எதிரிகள் அரவிந்தனையும் என்னையும் பார்த்து

இத்தோடு செத்து தொலைங்கடா என்று சொல்லி நாங்கள் வந்த பைக் மீது Hyundai Creta காரை வைத்து முட்டி மோதி விட்டார்கள் என்றும், அவ்வாறு முட்டி மோதியதில் அரவிந்தனும் நானும் தூக்கி வீசப்பட்டோம் என்றும் அதில் எனக்கு ஊமைக்காயமும், அரவிந்தனுக்கு தலையில் காயமும் ஏற்பட்டது என்றும், கார் மோதியதில் தூக்கி வீசப்பட்ட போது சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த ஆதிமூலம், முனியாண்டி, காளிதாஸ் எங்களை தூக்கினார்கள் என்றும் அப்போது அரவிந்தன் பேச்சு மூச்சில்லாமல் இருந்தார் என்றும் என்னிடம் மேற்படி 3 நபர்களும் விசாரித்தபோது இந்த எதிரிகள் காரை ஓட்டி வந்து இடது ஓரமாக போய்க்கொண்டிருந்த எங்களை பின்தொடர்ந்து விரட்டி வந்து முன்பகை காரணமாக இத்தோடு சாவுங்கடா என்று காரை வைத்து பைக்கில் மோதி சென்றுவிட்டார்கள் என்றும் பேச்சு மூச்சற்று கிடந்தவர் வைரவகேசுவின் மகன் என்று தெரிந்ததும் ஆதிமூலம் வைரவகேசுவுக்கும் போலிசுக்கும் தகவல் சொன்னார் என்றும் எங்களை இடித்த கார் தேவிப்பட்டிணம் மார்க்கமாக சென்றுவிட்டு திரும்ப இராமநாதபுரம் செல்வதை நான் பார்த்தேன் என்றும் கொஞ்சநேரத்தில் போலிசும் வைரவகேசுவும் அவரது தம்பி பூமிராஜனும் வந்தார்கள் என்றும் அப்போது வைரவகேசு என்னிடம் வந்து என்ன ஏது என்று கேட்டபோது இந்த எதிரிகள் காரில் விரட்டிவந்து முட்டிவிட்டு சென்றதாகவும் பின்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை சேர்ந்தபோது மருத்துவர் என்னிடம் எப்படி காயம் ஏற்பட்டது என்று கேட்டபோது நானும் அரவிந்தனும் இருசக்கர வாகனத்தில் தேவிப்பட்டிணம் செல்லும்போது தேசிய நெடுஞ்சாலையில் சக்கரவாளநல்லூர் விலக்கு ரோட்டில் இரவு 10.40 மணியளவில் தெரிந்த 4 நபர்கள் காரில் வந்து இடித்துவிட்டதாக

போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :– இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Sd/- B.C. Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | விஜயகுமார் | Caste: | |
| Father's Name: | கருப்பன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.10.2023

(Except A2 Others present. Petition u/s. 317 Crpc allowed for A2. )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தேவிப்பட்டிணம் சக்கரவாளநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.03.2020ம் தேதி மதியம் 2.30 மணிக்கு சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பில் நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த கருப்பையா என்பவரும் நின்று கொண்டிருந்தோம். அப்போது இராமநாதபுரம் காவல்துணைக்கண்காணிப்பாளர் அங்கு வந்தார். சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசரில் நானும் கருப்பையா என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ. 2**. அங்கு கிடந்த கருப்பு ஊதா கலந்த பல்சர் பைக்கை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதில் நானும் கருப்பையாவும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3**.

இதுசம்பந்தமாக இராமநாதபுரம் காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**A1, A2, A6, A7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.1 வைரவகேசு என்னுடைய உறவினர் என்றால் சரிதான். நான் கொத்தனார் வேலைக்கு தினமும் செல்பவர் என்றால் சரிதான். 19.03.2020லிருந்தே கொரானா லாக் டவுன் என்பதால் நான் வேலைக்கு போகாமல் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு தமிழ் வாசிக்க தெரியும். தமிழ் எழுத்துக்கள் கூட்டெழுத்தாக இருந்தாலும் எனக்கு வாசிக்க தெரியும். டிஎஸ்பி சொன்னதால்தான் நான் கையொப்பம் போட்டேன் என்றால் படித்து பார்த்து கையொப்பம் போட்டேன். அத்தாட்சி , பார்வை மகசர், வரைபடம் என் முன்னால் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் காவல்நிலையத்தில் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும், அ.சா.1 என் உறவினர் என்பதால் மேற்படி ஆவணங்களில் நான் காவல்நிலையத்தில் கையொப்பம் போட்டேன் என்றால்சரியல்ல. என் முன்னிலையில் பல்சர் பைக் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1க்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**A3 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வரைபடம், பார்வை மகசர், அத்தாட்சி ஆகியவை தயார் செய்வதற்கு சுமார் அரை மணி நேரம் ஆகிஇருக்கும். மேற்படி ஆவணங்களை யார் தயாரித்தார்கள் என்று கேட்டால் எஸ்பி தயாரித்தார். நான் பார்த்தபோது அந்த பைக் ஓடக்கூடிய நிலையில் இல்லை என்றால் சரிதான். அந்த பைக்கை நான் இருக்கும்போது போலிசார் எடுத்துக்கொண்டார்கள்.

அதற்கு பின்பு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**A8 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

சம்பவ இடத்தில் இருந்து சக்கரவாளநல்லூர் 2 கி.மீ இருக்கும். சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பில் இருந்து தெற்குபுறமாக 100 அடி தூரத்தில் தர்மமுனீஸ்வரர் கோவில் உள்ளது என்றால் சரிதான். அங்கு பூசாரி இருப்பார். இரவு இருக்கமாட்டார். சம்பவ காலத்தில் எங்கள் ஊருக்கு செல்லும் வழியில் சாலை பணி நடந்து சல்லிகள் கொட்டப்பட்டிருந்தது என்றால் சரிதான். பொதுவாக கொத்தனார் வேலைக்கு காலையில் போனால் மாலையில்தான் வருவேன்.

மேற்படி குறுக்கு விசாரணை A4,5 ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- B.C. Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.8

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜெகன்நாத பூபதி | Caste: | |
| Father's Name: | பழனி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.10.2023

(Except A2 Others present. Petition u/s. 317 Crpc allowed for A2. )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பிரப்பன்வலசை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். இதற்கு முன் 2020ல் வாலான்தரவை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கடந்த 23.03.2020ம் தேதி இராமநாதபுரம் டிஎஸ்பி தேவிப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண். 67/2020 வழக்கின் எதிரிகள் வாலான்தரவை பகுதியில் பதுங்கி இருப்பதாகவும் அவர்களை கைது செய்யவேண்டியிருப்பதாலும் என்னையும் என்னுடைய கிராம உதவியாளர் பரிமளாதேவியையும் அழைத்தன்பேரில் டிஎஸ்பி அலுவலகத்திற்கு சென்றோம். அங்கிருந்து போலிஸ் பார்ட்டியுடன் கிளம்பி இராமேஸ்வரம் –இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் காலை 5 மணியளவில் உடைச்சியார்வலசை விலக்கு ரோட்டில் வைத்து இந்த வழக்கின் குற்றவாளிகளான சரவணன் , சேதுபதி, கார்த்தி ஆகியோர்களை டிஎஸ்பி தலைமையிலான போலிஸ் பார்ட்டி கைது செய்து விசாரித்தனர்.

அதில் சரவணன் என்பவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை டிஎஸ்பி பதிவு செய்து கொண்டார். அந்த சரவணனைப் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். இன்று நீதிமன்றத்தில் அவர் ஆஜர் இல்லை. ( குவிமுச 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் குற்ற வழக்கிற்காக பயன்படுத்திய Hyndai வெள்ளை நிற பதிவு எண் இல்லாத கார் ஒன்றை நதிப்பாலம் வடகரையில் ரோட்டிற்கு மேற்குப்பக்கமாக காட்டுக்கருவேல் மரங்கள் உள்ள பகுதியில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார். என்னை அழைத்து சென்றால் அந்த மறைத்து வைத்திருக்கும் காரையும் இடத்தையும் அடையாளம் காண்பிப்பேன் என்று சொன்னார். அதன்பிறகு போலிஸ் பார்ட்டியும் நானும் அந்த இடத்திற்கு சென்றோம். அப்போது அந்த காரை அடையாளம் காண்பித்தார். டிஎஸ்பி அதனை அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.4**. அத்தாட்சி **அ.சா.ஆ.5**. அந்த காரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். ஏற்கனவே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான் அந்த கார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**A1, A2, A6, A7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் 2008ல் VAO வாக பணியில் சேர்ந்தேன். 2008லிருந்து 2020க்குள் சுமார் 4,5 குற்றவழக்குகளில் சாட்சி அளித்திருக்கிறேன். இந்த வழக்கிற்கு முன்பாக 2 கொலை வழக்குகளில் சாட்சி அளித்திருக்கிறேன். பொதுவாக கிராமத்திற்குட்பட்ட பகுதியில்

அடையாளம் தெரியாத பிரேதங்கள் இருந்தாலோ , சந்தேக மரணங்கள் ஏற்பட்டாலோ எங்களை புகார்தாரராக இருக்க சொல்வார்கள் என்றால் சரிதான். சில வழக்குகளில் சாட்சியங்களாக இருக்கவும் அழைப்பார்கள் என்றால் சரிதான். அதனால் நாங்கள் பணிபுரியும் இடத்தின் காவல்துறையினருடன் இணக்கமான உறவு இருக்கும் என்றால் சரிதான். எனக்கு விடுமுறை உள்ளதா என்றால் உண்டு ஆனால் அவசர பணிகளின்போது செல்லவேண்டும். எனக்கென்று வருகைப்பதிவேடு இல்லை. நாங்கள் செய்யும் பணிகளை குறித்துகொள்ளும் ஒரு பதிவேடு பராமரிப்போம் என்று சொன்னால் அத்தகைய பதிவேடு பராமரிக்கும் வழக்கம் சுமார் 10 ஆண்டுகளாக இல்லை. தினந்தோறும் செய்யும் பணிகளை பற்றி எங்களின் உயர் அதிகாரிகளுக்கு எழுத்துபூர்வமாகவோ அல்லது வாய்மொழியாகவோ அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்து தகவல் சொல்லுவோம். ஒரு கொலை குற்றவாளியை போலிசார் கைது செய்து அதில் நாங்கள் சாட்சியாக இருக்க வேண்டும் என்ற பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக இல்லையா என்றால் முக்கியத்துவம் வாய்ந்ததுதான். இந்த பணியை முடித்தபிறகு என் உயர் அதிகாரிக்கு வாய்மொழியாக தகவல் சொன்னேன், எழுத்து பூர்வமாக சொல்லவில்லை. 23.03.2020 ல் கொரானா லாக் டவுன் அமலுக்கு வந்துவிட்டது என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. அந்த சமயத்தில் கொரானா ஊரடங்கு அமலுக்கு வந்ததால் எங்கள் பணி அவசர கால பணி என்பதால் நேரடியாக மாவட்ட ஆட்சியரின் கீழ் இயங்கி கொண்டிருந்தோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் என்னுடைய பணி வாலான்தரவை கிராமத்தில்தான், வேறு எந்த சிறப்பு பணியும் எனக்கு கொடுக்கவில்லை. எங்களுடைய கிராம எல்லையைவிட்டு வெளியில் செல்லவேண்டும்

என்றால் மேலதிகாரிகளின் அனுமதி பெற்றுதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். எனக்கு டிஎஸ்பி அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று அதிகாலை 4 மணிபோல் போன் வந்தது. அப்போது டிஎஸ்பி அலுவலகம் GH ரோட்டில் ஐஸ்வர்யா ஹோட்டலுக்கு எதிரே இயங்கி வந்தது. வாலான்தரவை கிராமத்திற்கும் டிஎஸ்பி அலுவலகத்திற்கும் இடையே சுமார் 7,8 கி.மீ இருக்கும். நான் டிஎஸ்பியை பார்க்க வருவதற்கு அனுமதி எதுவும் தனியாக பெற்றுவரவில்லை. அது லாக் டவுன் சமயம் என்பதால் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு செல்ல அனுமதி பெற்றுதான் செல்லவேண்டும் என்பதால் அன்றைய தினம் நான் சொல்வதுபோல் டிஎஸ்பி அலுவலகத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நதிப்பாலம் என்பது பனைக்குளம், அழகன்குளம், பெருங்குளம் ஆகிய வருவாய் கிராமங்களின் எல்லைக்குள் வரும் என்றால் சரிதான். அந்த மூன்று கிராமங்களுக்கும் தனியாக VAO க்கள் மற்றும் தலையாரிகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் நெடுஞ்சாலையில் சுமார் 4 கி.மீ தூரத்தில் உடைச்சியார்வலசை விலக்கு ரோடு உள்ளது. உடைச்சியார்வலசைக்கு பிரதான சாலையிலிருந்து வலதுபுறத்தில் 1 கி.மீ செல்ல வேண்டும் என்றால் சரிதான். இராமேஸ்வரம் பிரதான சாலை அந்த விலக்கிற்கு எதிரே ஊரணி, வேப்பமரம், டீக்கடை ஆகியவை உள்ளன. போலிஸ் விசாரிக்கும்போது என்னை டிஎஸ்பி அழைத்தது பற்றியும் நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று என் முன்னிலையில் எதிரியை கைது செய்தது பற்றியும் சொல்லியுள்ளேன். நதிப்பாலம் என்பது ஒரு பேருந்து நிறுத்தம். அந்த இடத்தில் இருந்து 4 ரோடுகள் பிரிகிறது என்றால் சரிதான். அந்த 4 சாலைகள் பிரியும் இடத்திலேயே கார்

கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை, அங்கிருந்து மெயின் ரோட்டில் சுமார் 1 கி.மீ சென்று மேற்குபக்கம் 1 கி.மீ சென்று அங்குதான் கார் பறிமுதல் செய்யப்பட்டது. அந்த சாலை 4 ரோடுகள் பிரியும் இடத்திலிருந்து பனைக்குளம், அழகன்குளம் ஆகிய கிராமங்கள் நோக்கி செல்லும் சாலையாகும். 1 கி.மீ சென்றால் கருத்தமடை அய்யனார் கோவில் ஆர்ச் வருமா என்றால் அந்த ஆர்ச்சிற்கு முன்பே அந்த இடம் உள்ளது. பொதுவாக சேதமடைந்த ஒரு வண்டியை போலிசார் கைப்பற்றினால் அத்தாட்சியில் அதன் சேதத்தைப்பற்றி எழுதியிருக்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட காரில் சேதம் இருந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் மேற்படி எதிரிகளை என் முன்னிலையில் போலிசார் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி சரவணன் என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி Hyundai Creta கார் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி சரவணனின் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டு கணினி மயமாக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி கையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஒரு அரசு ஊழியர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**A3 தரப்பு குறுக்கு விசாரணை :–**

கார் இருந்ததாக சொல்லப்படும் இடம் பொதுமக்கள் எல்லாரும் செல்லக்கூடிய இடம் என்றால் சரிதான். எதிரிகள் சரவணன், சேதுபதி, கார்த்திக் ஆகியோரை கைது செய்த விவரத்தை விசாரணையின்போது

டிஎஸ்பியிடம் கூறியுள்ளேன். எதிரி சேதுபதி தேவிப்பட்டிணத்தை சேர்ந்தவர். அவர் வாலான்தரவையைச் சேர்ந்தவர் அல்ல. எதிரி பெயர் சேதுபதி என்று டிஎஸ்பி சொல்லி தெரியும். அவர் சொன்னது உண்மைதான் என்று தேவிப்பட்டிணம் VAO வைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை. எதிரிகளைப் பார்த்ததாகவும், அவர்களை போலிசார் கைது செய்யததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் போலிசாரின் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. எதிரி சேதுபதியின் அப்பா பெயர் எனக்கு ஞாபகமில்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Sd/- B.C. Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | தர்மராஜ் | Caste: | |
| Father's Name: | வேலு | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 12.10.2023

(Except A2 Others present. Petition u/s. 317 Crpc allowed for A2. )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குயவன்குடி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். இதற்கு முன் அழகன் குளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கடந்த 19.05.2020ம் தேதி டிஎஸ்பி எனக்கு காலை 10 மணிக்கு போன் செய்து தேவிப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண். 67/2020 வழக்கில் எதிரிகளை கைது செய்து வைத்திருப்பதாகவும் என்னுடைய உதவியாளருடன் வரவேண்டும் என்று சொன்னார். என் உதவியாளர் அன்று விடுப்பில் இருந்ததால் பக்கத்து கிராமத்தின் கிராம உதவியாளர் முனியசாமி என்பவரை அழைத்துகொண்டு அழகன் குளம் நஜியா பள்ளி பக்கத்தில் உள்ள பஸ்நிறுத்தத்திற்கு சென்றோம். 10.30 மணியளவில் டிஎஸ்பி போலிஸ் பார்ட்டியும் வந்துவிட்டனர். பஸ்நிறுத்தத்தில் இருந்த மூன்று நபர்களை கைது செய்தார்கள். அவர்கள் பெயர் பாலா என்ற பாலமுரளிகிருஷ்ணா, மகேந்திரன், பாஸ்கரன் என்று

சொன்னார்கள். அதைத் தொடர்ந்து பாலமுரளிகிருஷ்ணா ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதை டிஎஸ்பி லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டார். பின்னர் பென்டிரைவில் Copy செய்து பிரிண்ட் எடுத்து என்னிடமும் என் உதவியாளர் முனியசாமியிடமும் கையெழுத்து வாங்கினார். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**A1, A2, A6, A7 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–**

போலிஸ் விசாரிக்கும்போது எதிரிகளை கைது செய்ய வேண்டும் என்று எங்களை அழைத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கைது செய்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து பெருங்குளம் 3 கி.மீ தூரத்தில் இருக்கும். நஜியா பள்ளிக்கு வடக்கு பக்கம் பேருந்து நிறுத்தம் உள்ளது. அந்த நஜியா பள்ளிக்கு தெற்கு பக்கம் HP பெட்ரோல் பல்க் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதற்கு எதிர்புறம் காம்ப்ள்க்ஸ் இருந்தது என்றால் ஒரே ஒரு கடை மட்டும்தான் இருந்தது. அந்த நேரம் கொரானா ஊரடங்கு என்பதால் அந்த கடைகள் அடைக்கப்பட்டிருந்தன என்றால் சரிதான். ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு யாரும் போகமுடியாது என்றால் சரிதான். ஒவ்வொரு 3 கி.மீக்கும் போலிசார் செக் போஸ்ட் போட்டு பாதுகாப்பு பணியில் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த பஸ் நிறுத்தத்திற்கு மேற்படி எதிரிகள் எவ்வாறு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் மேற்படி எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பின்னிட்டு தயாரிக்கப்பட்டு காவல்நிலையத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

அரசு ஊழியர் என்பதால் போலிசாருக்கு அனுசரனையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**A5 தரப்பில் குறுக்கு விசாரணை :–**

கைது செய்ததாக சொல்லப்படும் 3 நபர்களின் அடையாள அட்டையை நான் பார்க்கவில்லை. போலிசார் சொல்லித்தான் அவர்கள் பெயர் தெரியும். நான் பணிக்கு செல்வது சம்பந்தமாக Movement Register பராமரிக்க வேண்டும் என்றால் தற்போது அதை பராமரிக்க வேண்டும் என்று அவசியமில்லை. காவல்துறையினருடன் வெளி இடங்களுக்கு செல்வது என்னுடைய அலுவலக பணி இல்லை என்றால் சரிதான். அலுவலக பணி இல்லாத வேறு பணிக்கு செல்ல வேண்டும் என்றால் எங்கள் உயர் அதிகாரிகளின் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். மேற்படி பணிக்கு சென்றது சம்பந்தமாக மேலதிகாரிகளிடம் அனுமதி பெற்றதற்கான ஆவணம் விசாரணையின்போது நான் கொடுக்கவில்லை. நான் VAO Manual ன் அடிப்படையில்தான் செயல்படவேண்டும் என்றால் சரிதான். குற்ற வழக்கில் சாட்சியாக போடப்பட்டால் அது சம்பந்தமாக உயர் அதிகாரிகளுக்கு தனியறிக்கை கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அந்த மாதிரி இந்த வழக்கில் எந்த தனியறிக்கையும் தாக்கல் செய்யவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் இந்த பணியை நான் செய்யவில்லை என்பதால்தான் நான் தனியறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை A3,4,8 தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- B.C. Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)